அளவிலா அருளாளன் நிகரிலா அன்பாளன் அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# பித்அத் ஒழிப்பு மற்றும் சமுதாயப் பாதுகாப்பு மாநாடு

இன்ஷா அல்லாஹ்

**பிப்ரவரி 5, 2023 திருச்சியில்...**

**பித்அத்களை ஒழிப்போம்! சமுதாயத்தைப் பாதுகாப்போம்!**

## பித்அத் ஒழிப்பு

பித்அத் என்ற அரபி வார்த்தைக்கு புதுமை என்று பொருள். நபிகளாருக்குப் பின் மார்க்கத்தின் பெயரால் புதிதாக உருவாக்கப்பட்ட காரியங்களே பித்அத் ஆகும். ஆனால் நபியவர்கள் கற்றுத் தரவில்லை என்பதால் அவற்றிற்கு யாதொரு நன்மையும் கிடைக்காது.

இஸ்லாத்தில் ஒரு வணக்கம் உண்டென்றால் அது நபிகளாரின் காலத்தில் இருந்திருக்க வேண்டும். அவர்களின் காலத்திற்கு பின் வந்த எந்த ஒன்றும் இஸ்லாமிய வணக்கமாக ஆகாது.

நபி (ஸல்) உயிருடன் வாழும் காலத்திலேயே இறைவன் இம்மார்க்கத்தை முழுமை படுத்தி விட்டான்.

**இன்று உங்கள் மார்க்கத்தை உங்களுக்கு முழுமை படுத்தி விட்டேன்.எனது அருட்கொடையை உங்களுக்கு நிறைவாக்கி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்குரிய மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்**

*அல்குர்ஆன்: 05:03*

### அண்ணலாரின் அப்பழுக்கற்ற போதனை

நபி (ஸல்) கூறினார்கள். நான் உங்களை (மார்க்கம்) வெண்மையான நிலையில் விட்டுச் செல்கிறேன். அதனுடைய இரவும், பகலைப் போன்றதாகும். அழியக் கூடியவனைத் தவிர வேறு யாரும் எனக்குப் பிறகு அதை விட்டும் வழி தவற மாட்டார்கள்.

*நூல்: அஹ்மத் : 16519.*

### இஸ்லாமியர்களிடத்தில் நுழைந்து விட்ட புதுமைகள்

நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கு பின் வந்த இஸ்லாமியர்களில் சிலர் மார்க்கத்தில் இல்லாத புதுமைகளை இஸ்லாத்தின் பெயரால் புகுத்த ஆரம்பித்தனர். திருமணம், ஜனாஸா, தொழுகை, திக்ரு, நோன்பு மற்றும் இவை போன்ற பல வணக்கங்களில் பித்அத்களைப் புகுத்தி மார்க்கம் தடுக்கும் காரியங்களை செய்து வருகின்றனர். அதற்கு நன்மைகள் கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். இந்த நடைமுறை தவறானதாகும். இதை விட்டும் மக்கள் விலகிட வேண்டும்.

### பித்அத்கள் (புதுமைகள்) குறித்த நபிகளாரின் எச்சரிக்கைகள்

நபி(ஸல்) கூறினார்கள். நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததைப் புதிதாக எவன் உண்டாக்குகின்றானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்படும். நூல்: புகாரி :2697

நபி (ஸல்) கூறினார்கள்: **செய்திகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வின் வேதம். நடைமுறையில் மிகவும் சிறந்தது முஹம்மது (ஸல்) அவர்களின் நடைமுறை. செயல்களில் மிகக் கெட்டது (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உருவானவையாகும். புதிதாக உருவாகக் கூடியவைகள் அனைத்தும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்தில் கொண்டு சேர்க்கும்.**

*நூல்: நஸாயி: 1560*

நாம் மேற்குறிப்பிட்ட விஷயங்களை மக்கள் நடுநிலையோடு சிந்தித்து அல்லாஹ்வும், தூதரும் காட்டித் தந்த வணக்கங்களை மட்டுமே நடைமுறைப் படுத்த வேண்டும். பித்அத்தான காரியங்களை விட்டொழிக்க வேண்டும். இத்தகைய பித்அத் ஒழிப்பு பிரச்சாரத்தை மையப்படுத்தியே வரும் 2023 பிப்ரவரி 5 ஆம் நாள் திருச்சியில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் பங்குபெறும் மாநாட்டை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் அறிவித்துள்ளது.

## சமுதாயப் பாதுகாப்பு

இந்தியாவில் தீண்டாமையையும் சாதிய, சனாதன கட்டமைப்பையும் ஒழித்துக் கட்டுகின்ற ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டுமே! அதனால் இது தங்களுடைய சாதிய, சனாதன கட்டமைப்பு தகர்த்தெறிகின்றது என்பதால் சங்கப்பரிவாரங்கள் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் ஒழித்துக் கட்டுவதில் அன்றிலிருந்து இன்று வரை திட்டமிட்டு முயற்சி செய்து வருகின்றனர். 2014ல் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு அந்த திட்டத்தை படிப்படியாக அவர் செயல்படுத்தி வருகின்றார். அவரும் அவரது பாசிச பாஜகவினரும் பல வியூகங்களை கையில் எடுத்திருக்கின்றனர்:

### 1 ஷரீஅத் சட்டத்தை அழிப்பது

பொதுவாக, A)திருமணம், B)விவாக ரத்து (தலாக்) C)பலதார திருமணம் D)பாகப்பிரிவினை E)இறந்தவர்களை அடக்கம் செய்தல் ஆகிய அனைத்தும் முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் அனுபவிக்கும் உரிமைகளாகும். இந்த உரிமைகளை பறிக்கும் விதமாக பொதுசிவில் சட்டத்தைக் கொண்டு வர பாஜக அரசு துடிக்கின்றது. இந்தியாவில் முதன் முதலில் உத்தரகாண்டில் ஆளும் பாஜக அரசு விரைவில் கொண்டு வரவிருக்கின்றது. முத்தலாக் தடைச் சட்டம் அந்த திட்டத்தின் ஒரு முன்னோட்டமாகும்.

### 2 இஸ்லாத்திலும் சாதி?

பொருளாத ரீதியில் பின் தங்கிய 'பாஸ்மந்தா' முஸ்லிம்களை இஸ்லாத்தில் உள்ள 'சாதியினர்' என்பது போல் காட்டி,இஸ்லாமும் சாதிகளை கொண்ட மார்க்கம் என்ற பிம்பத்தை மோடி கட்டமைக்கின்றார். இது அவர் சத்திய இஸ்லாத்தை கொச்சைப்படுத்துவதற்கு எடுத்திருக்கும் மிக பெரும் சதித்திட்டமாகும்.

### 3 இன அழிப்பு

மாட்டின் பெயரால் மட்டுமல்லாமல் மாட்டிறைச்சி வைத்திருந்த சந்தேகத்தின் பெயராலேயே முஸ்லிம்களை அடித்தே இவர்கள் கொல்கின்றனர்

### 4 வாழ்வாதாரம் பறிப்பு

வடமாநிலங்களில் முஸ்லிம்களின் வாழ்வாதாரரமாக விளங்குவது மாட்டிறைச்சி விற்பனையாகும். பசுக்களை தாண்டி மாடுகள் விற்பனையையும் தடை செய்து அவர்கள் வாழ்வாதரத்தை பாஜக ஆளும் மாநில அரசுகள் முடக்கி விட்டன. மத ஊர்வலங்கள் நடத்தி கல் வீச்சுக்கள் நடத்தி முஸ்லிம்களின் வணிகத்தலங்களையும், வசிக்கும் வீடுகளையும் புல்டோசர்கள் மூலம் இடித்து தரைமட்டமாக்குவது அடிக்கடி நடக்கும் நிகழ்வாகி விட்டது..

### 5 வழிப்பாட்டுரிமை பறிப்பு

அஸ்ஸாம் அரசு பயங்கரவாதம் என்ற காரணம் காட்டி அங்குள்ள முஸ்லிம்களின் பள்ளிவாசல்களையும் மத்ரஸாக்களையும் இடித்து தரைமாட்டமாக்கிக் கொண்டிருக்கின்றது. உ.பி.யில் வீட்டில் தொழுபவர்களும் கைதுச் செய்யப்படும் அநியாயம் அரங்கேறுகின்றது.பஜனை பாடும் ஒலிபெருக்கிகளுக்கு அனுமதியிருக்கும் அதே வேளையில் பாங்கோசை எழுப்பும் ஒலிபெருக்கிகளுக்கு அனுமதியில்லை.பாபரி மஸ்ஜிதை அடுத்து காசி, மதுரா பள்ளிவாசல்களையும் நீதிமன்றங்களின் துணையுடன் கோயில்களாக மாற்றும் முயற்சிகள் மிக வேகமாக நடைப்பெற்றுக் கொண்டிருகின்றன.

### 6 ஹிஜாப் உரிமை மறுப்பு

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிவதற்கு பாஜக ஆளும் கர்நாடகா அரசு தடை விதிக்கின்றது.

### 7 குடியுரிமை பறிப்பு

இத்துணை அடக்குமுறைகளை இவர்கள் முஸ்லிம்கள் மீது ஏவி விடுவதற்கு காரணம் என்ன? எல்லாவற்றிற்கும் மேலாக இந்த பாசிச சக்திகள் மண்ணின் மைந்தர்களான முஸ்லிம்களை சொந்த நாட்டிலேயே நிரந்தர அகதிகளாக்குகின்றன, குடியுரிமை திருத்த சட்டத்தையும் கொண்டு வந்து விட்டனர். இவர்களின் இந்த குடியுரிமைப் பறிப்பு திட்டத்திற்கும் சட்டத்திற்கும் காரணம் என்ன? இந்த சமுதாயம் ஏக இறைவனாகி அல்லாஹ்வை மட்டும் நம்பி முஸ்லிம்களாக வாழ்வது தான். அதனாலேயே இன்று அந்த சமுதாயத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. தன் சக்திக்குட்பட்டு இந்த சமுதாயம் தன்னை தற்காத்துக் கொள்ளவும் தனது ஷரீஅத்தை காத்துக் கொள்ளவும் காண வேண்டிய வழிமுறை என்ன? என்பதை உணர்த்துவது இம்மாநாட்டின் இரண்டாவது இலட்சியமாகும்.

இந்த இரண்டு இலட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்ற இம்மாநாட்டில் தாங்கள் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்**

**மாநிலத் தலைமையகம்**